அந்த அமைச்சர் மௌரியா என்பவர்; அந்த அமைச்சர் எப்படி இந்த இலாக்காவை நடத்தப்போகிறார், எதிர்காலத்தில் எப்படி நெசவாளர்களைப் பாதுகாக்கப்போகிறார் என்ற பயம் எனக்கு இருக்கிறது. நண்பர் சுரேந்திரன் அவர்கள்தான் கை கொடுக்கவேண்டும்.

சத்திரப்பட்டியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

*345 வினா—திரு. ச. சுப்பு : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சத்திரப்பட்டியில் "வீரபாண்டிய கட்டபொம்மன்" நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்குமாறு கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வீரபாண்டிய கட்டபொம்மன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க மதுரையிலுள்ள இராமநாதபுரம் உதவி கைத்தறி இயக்குநருக்கு விண்ணப்பம் வந்தது.

(இ) சங்கம் பதிவு செய்வதற்கு முன்னால் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் ஒப்புதல் கோரி உதவி இயக்குநர் எழுதியுள்ளார்.

Drinking Water Supply for Puthukadai area.

***346 Q.—THIRU R. PONNAPPA NADAR** : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to provide drinking water facilities to the Puthukadai Town Panchayat in Munchirai Union, Vilavancode taluk ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) புதுக்கடை, முஞ்சிரை, பார்த்திவபுரம் மற்றும் ஆழங்குளம் ஊராட்சிகளுக்குக் குடிநீர் வழங்க வேண்டி ஆய்வு வேலைகள் செய்யும் பொருட்டு ரூ. 10,800-க்கு ஆய்வு மதிப்பீடு ஒன்றினுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 17-6-1974-ல் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கூறிய ஊராட்சிகள் தமது விகிதாச்சார ஆய்வுத் தொகையினை கடந்த ஆண்டு அக்டோபரில்தான் கட்டியுள்ளன. எனவே, ஆய்வு வேலைகளை விரைவில் தொடங்கி முடித்து திட்ட மதிப்பீடு தயாரித்து அனுப்பிவைக்குமாறு தலைமைப் பொறியாளருக்கு குடிநீர் வடிகால் வாரியம் உத்தரவிட்டுள்ளது.

1975 மார்ச் 17]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, ஆய்வு வேலை தொடங்கியிருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இது எப்பொழுது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால் இது குடிதண்ணீர்ப் பிரச்சினையாக இருப்பதால் அரசாங்கம் அதற்கு அதிகக் கவனம் செலுத்தி விரைவில் நிறைவேற்றிக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இது குடிதண்ணீர்ப் பிரச்னையானதால் வெகுவிரைவிலே முடிந்துவிடும்.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இதற்கான இன்வெஸ்டிகேஷன் சார்ஜைக் கட்டிப் பல காலமாகிவிட்டது. குடிதண்ணீர்ப் பிரச்னையில் அந்தக் கிராமத்து மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சானிடரி கண்டிஷன் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அரசு வழி வகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, உடனடியாக நிறைவேற்றவேண்டித்தான் அந்த ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. க. மு. இராசகோபால்: தலைவரவர்களே, குடிதண்ணீர் ஆய்வுக் குழு தேர்ந்தெடுப்பதாகக் கூறுகிறார்கள். அதாவது தண்ணீர் இல்லாத ஊர்களிலேயும் நோய் இருக்கின்ற ஊர்களிலேயும் எடுப்பதாக அறிக்கை வருகிறது. யார் போய் அதைப் பார்க்கிறார்கள், யார் அதற்கு செலக்ஷன் செய்கிறார்கள், கேள்விமுறையில்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தார், செய்தார் என்ற விளக்கம் வருகிறதே தவிர, என்னுடைய ஊரிலே தண்ணீரே கிடையாது, ஆனால் ஊர் இல்லாத இடத்திலே, தலையில்லாப் பெரும்பாக்கம் ஊரே கிடையாது; ஆனால் நம்பர் இருக்கிறது, எனவே இதற்கு சரியான முறையில் செய்ய ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அதற்கான துறையிலே, குடிநீர்த் துறையிலே அதிகாரிகளும் இன்னும் ஹெல்த் டிபார்ட்மெண்டிலே இருக்கிறவர்களும் விஷச் சத்து இருக்கிறதா என்று ஆராய்கிறார்கள். தண்ணீர் இருக்கிறதா என்ற ஆய்வை குடிநீர் பொறியியல் துறையிலே இருப்பவர்கள் ஆய்வு செய்கிறார்கள். தண்ணீர் இல்லாத இடத்திலே ஆய்வு செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி ஏதேனும் இருந்தால் தனிப்பட்ட முறையிலே குறிப்பு கொண்டுவருவார்களேயானால் அதைப்பற்றி விசாரிக்கலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்கள் தண்ணீர் கிடைக்க இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கொடுக்கிறார்கள். ஆனால் சில பஞ்சாயத்துக்களில் இன்வெஸ்டிகேஷன் செய்த பிறகு அதற்குண்டான ஃபீசிபிலிட்டிஸ்", வாய்ப்பு இல்லை என்று தெரிந்தால்

கொடுக்கப்பட்ட பணம் வீணாகப் போகிறது. ஆகவே இன்வெஸ் டிகேஷன் நடத்தி அதிலே தண்ணீர் கிடைக்கும் கிராமங்களிலே மட்டும் இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் வாங்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அநேகமாக இப்படிப்பட்ட சிக்கல் இதுவரையில் வரவில்லை. அப்படி வருமானால் அதுபற்றி யோசிக்கப்படும்.

கோட்டூர்—பொங்காளியூர் சாலை.

*347 வினா—திரு. இ. ராமசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

பொள்ளாச்சி தாலுக்கா, கோட்டூர்—பொங்காளியூர் வழி தேங்காய்—பாறை நெடுஞ்சாலைக்கு தார் போடும் பணி தற்போது எந்நிலையி லுள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, தார் போடும் பணி முடிவடைந்துள்ளது.

பொள்ளாச்சி நகராட்சி ஊழியர் குடியிருப்பு.

* 348 வினா டாக்டர் எச் வி. ஹாண்டே: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா?

(அ) பொள்ளாச்சி நகரமன்றம் நகராட்சி ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கென நிலம் வாங்கத் தீர்மானித்துள்ளதா?

(இ) ஆமெனில், ஏற்கனவே அரசாங்கம் மூலம் கொடுக்கப்பட்ட நிலத்தினை இதற்கென உபயோகிக்காமல் அச்சமயம் புதிதாக நிலம் வாங்கக் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) பொள்ளாச்சி நகராட்சிக்கு ஏற்கனவே அரசாங்கத்தின்மூலம் இதற்கென அரசு நிலம் எதுவும் ஒதுக்கப்படவில்லை.

குடிசைப் பகுதி மாற்றுவாரிய குடியிருப்புகள்.

*349 வினா : டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—?

(அ) குடிசை மாற்றுவாரியத்தால் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளில் குடியிருப்போர் ஊதியத்திற்கு ஏற்றாற்போல் வாடகை செலுத்த வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?